# மெட்ரோ ரயில் இணைப்பு ஊர்தி: நவம்பரில் 64, 774 பேர் பயணம்

**சென்னை, டிச. 5:** சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களில் ஷேர் ஆட்டோ, கார், சீருந்து (கேப்ஸ்) இணைப்பு சேவையை கடந்த நவம்பரில் 64,774 பேர் பயன்படுத்தியுள்ளனர்.

சென்னை மெட்ரோ ரயில் சேவையை பயன்படுத்தும் பயணிகளுக்காக, கிண்டி, திருமங்கலம், ஆலந்தூர், சின்னமலை, ஈக்காட்டுதாங்கல், கோயம்பேடு, பரங்கிமலை ஆகிய 7 மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து ஷேர் ஆட்டோ சேவையும், அண்ணாநகர் கிழக்கு, கோயம்பேடு, ஆலந்தூர், வடபழனி, திருமங்கலம் ஆகிய 5 மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து கார் சேவையும் வழங்கப்படுகிறது.

இதுதவிர, போர்ட் மொபிலிட்டி தயாரித்த செயலி வழியாக சீருந்து இணைப்பு சேவை 15 மெட்ரோ ரயில் நிலையங்களில் செயல்படுத்தப்படுகின்றன.

**64,774 பேர் பயன்படுத்தினர்:** இந்நிலையில், மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து ஷேர் ஆட்டோ, கார், சீருந்து சேவையை நிகழாண்டில் கடந்த நவம்பர் மாதத்தில் 64,774 பேர் பயன்படுத்தியுள்ளனர். நவம்பர் மாதத்தில், கார் சேவையை 3,960 பேரும், ஷேர் ஆட்டோ சேவையை 35,294 பேரும், சீருந்து இணைப்பு சேவையை 25,520 பேரும் பயன்படுத்தினர்.

கார், ஷேர் ஆட்டோ சேவையை கடந்த ஆண்டு ஆகஸ்ட் 11-ஆம் தேதி முதல் நிகழாண்டில் நவம்பர் 30-ஆம் தேதி வரை 6,53,229 பேர் பயன்படுத்தியுள்ளனர்.